கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை
முன்னிலை - திருமதி. பா.கலைநிலா, M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, அருப்புக்கோட்டை
2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் நாள், வியாழக்கிழமை

**I.A. No.3/2022 in O.S. No.58/2016**

விவேகானந்தன் ... மனுதாரர் /வாதி

/எதிர்/

1. கோபாலகிருஷ்ணன்
2. சுப்புராஜ்
3. விஜயலட்சுமி ...எதிரமனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு 29.08.2022-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் / வாதி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.ராஜாதேசிங் அவர்கள் முன்னிலையாகியும் உள்ள நிலையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்....

**உத்தரவு**

இவ்வழக்கில் வாதி தரப்பு முதல்விசாரணை தொடர்ச்சிக்கு அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி, பிரிவு 151 சி.பி.சி-ன் படி இம்மனு தாக்கல்.

2. <u>மனுதாரர்களின் மனுவின் சுருக்கம்</u>

இவ்வழக்கில், மனுதாரர்/வாதியை எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பில் ஒரு ஆவணம் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை பிராதுடன் 1-வது லக்க ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்தின் சார்பதிவக நகலை தற்போது தாக்கல் செய்ய வேண்டியுள்ளதால், அதற்கு தோதாக வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக ஏற்பட்டுள்ள வாய்தாவை வாதியின் முதல்விசாரணை

தொடர்ச்சிக்காக வாய்தா ஏற்படுத்தி, மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் / பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>

இம்மனுவில் மனுதாரர் கோரியிருக்கும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக் கூடியதில்லை. மனுவுடன் தாக்கல் அபிடவிட்டில் கண்டுள்ள விசயங்கள் யாவும் பொய்யானவை. மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்வதற்காக வேண்டி, மனுதாரர் முதல் விசாரணை தொடர்ச்சிக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கோரியிருப்பது ஏற்புடையதல்ல. 09.08.1974-ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் ஜெராக்ஸ் நகலை பிராதுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், தற்பொழுது அதற்கு பதிவு நகல் பெற்று தாக்கல் செய்துள்ளதாகவும் கூறியிருப்பது ஏற்புடையதல்ல. அசல் ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யப்படவில்லையென்ற எந்த காரணமும் கூறப்படவில்லை. வாதியை விசாரணை செய்யும்பொழுதே, முதல் விசாரணை தொடர்ச்சி என்று வாய்தா பெற்றுக்கொள்ளாமல் வழக்கை இழுத்து கடத்தும் நோக்கில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவை, எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்றும், மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் வாய்மொழி சாட்சியமோ, ஆவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை.

5. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாகும்.

**<u>தீர்வு</u>**

6. இம்மனுவானது, மனுதாரரால் ஆவணம் குறியீடு செய்ய வேண்டி தனது தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி அனுமதிக்குமாறு கோரி மனு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில், மேற்படி மனுவானது ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

7. இருதரப்பு வாதங்களும் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுவில், மனுதாரர் 09.08.1974 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சார்பதிவக நகலை ஆவணமாக தாக்கல் செய்ய வேண்டி, மனு


P KALAI NILA Digitally signed by P KALAI NILA

செய்துள்ளார். மேற்படி மனுவுடன், கூடுதல் ஆவணம் குறியீடு செய்ய வேண்டி அனுமதியளிக்குமாறு மனுவும் மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். மனுவில் கண்டுள்ள ஆவணத்தை மனுதாரர் பிராதில் குறிப்பிட்டுள்ளதும், மேலும் மேற்படி ஆவணமானது, நகல் என்ற நிலையில், குறியீடு செய்யப்படாததும் தெரியவருகிறது.

8. மனுவானது, தற்போது வா.சா.1-ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையிலுள்ள நிலையில், தற்போது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளால் மனு ஆட்சேபிக்கப்பட்டாலும், மேற்படி ஆவணமானது, வாதியின் உரிமையை நிலைநிறுத்தும் ஆவணமாக வாதி தரப்பில் கோரப்பட்டிருப்பதால், மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வதால் மட்டும் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்ற நிலையில், நீதியின் நலன் கருதி மனுதாரரின் மனுவினை அனுமதிப்பதுதான் சட்டத்தின்பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்க்கப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P KALAI NILA Digitally signed by P KALAI NILA

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை.

P KALAI NILA Digitally signed by P KALAI NILA

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

-------------------------------------------------

Additional District Munsif Court,
Aruppukottai
I.A. No.3/2022 in O.S. No.58/2016
Fair Order / Draft Order
Dt :01.09.2022

-----------------------------------------------